# பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

# <u>வெற்றிடம்</u>

## பணிப்பாளர் நாயகம் (01)

## ( இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்- SLIDA)

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் (SLIDA) மேற்குறித்த பதவிக்குரிய தகைமைகளையுடைய அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## <u>தகைமைகள் மற்றும் தேர்ச்சிகள்</u>

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடப் பரப்பிற்கு உரித்தான பட்டப்பின் பட்டத்துடன் கூடிய இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துடைய அலுவலராயிருத்தல் மற்றும் நிறைவேற்று / முகாமைத்துவ பதவிகளில் 20 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

அல்லது,

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்புக்கு உரித்தாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

  மற்றும்

  இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ நிறைவேற்று மட்டத்துடைய அலுவலராக 20 வருட அனுபவம் மற்றும் அதில் மூன்று (03) வருடங்கள் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியிருத்தல்.

அல்லது,

- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் விடயப் பரப்பிற்கு உரித்தாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் பட்டத்துடன் அரச அல்லது நியதிச் சட்டச் சபையொன்றில் அல்லது நிறைவேற்று / முகாமைத்துவ பதவிகளில் 20 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான (HM 2-1) அனுபவங்களைப் பெற்றிருத்தல்.

- 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கும் அரச ஊழியர்களுக்கும் அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையற்றது.
- சகல தகவல்களையும் உள்ளடக்கிய சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பப்படிவத்தினை 2019 சனவரி மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில், செயலாளர், பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி”** என்ற வகையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**ஜே.ஜே. ரத்னசிரி**
**செயலாளர்,**
**பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு.**